**செய்தி வெளியீடு எண்:765** **நாள்: 11.11.2017**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் 8.11.2017 அன்று தலைமைச் செயலகத்தில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் திருவள்ளூர் மாவட்டம், கோலப்பன்சேரியில் 1 கோடியே 14 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஆதிதிராவிடர் நலப் பள்ளி மாணவர் விடுதிக் கட்டடம் மற்றும் கடலூர் மாவட்டம், ம.புடையூரில் இயங்கி வரும் ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளியில் 54 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கூடுதல் பள்ளிக் கட்டடம் ஆகியவற்றை திறந்து வைத்தார்கள்.

சமூகத்தில் அனைத்து தரப்பு மக்களும் சம வாய்ப்புகளைப் பெற்று பொருளாதார ரீதியிலும், சமூக வாழ்விலும் முன்னேற்றம் அடைய வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில், சமூகப் பொருளாதார வாழ்வில் பின்தங்கியுள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ, மாணவிகளின் கல்வி வளர்ச்சியை பெருக்கிட, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ, மாணவிகளுக்காக புதிய பள்ளிகளை கட்டுதல், விடுதிக் கட்டடங்களை கட்டுதல், கல்வி உதவித்தொகை வழங்குதல் போன்ற பல்வேறு சீரிய திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், திருவள்ளூர் மாவட்டம், கோலப்பன்சேரியில் 1 கோடியே 14 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 55 மாணவர்கள் தங்கும் வகையில் கட்டப்பட்டுள்ள ஆதிதிராவிடர் நலப் பள்ளி மாணவர் விடுதிக் கட்டடம்;

கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டம், ம.புடையூரில் இயங்கி வரும் ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளியில் 54 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 270 மாணவர்கள் பயன்பெறும் வகையில் கட்டப்பட்டுள்ள கூடுதல் பள்ளிக் கட்டடம்;

என மொத்தம் 1 கோடியே 68 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாணவர் விடுதிக் கட்டடம் மற்றும் கூடுதல் பள்ளிக் கட்டடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு.பி. பெஞ்சமின், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி. வி.எம்.ராஜலெட்சுமி, மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ் பண்பாட்டுத்துறை அமைச்சர் திரு.க. பாண்டியராஜன், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை முதன்மைச் செயலாளர் (முழு கூடுதல் பொறுப்பு) டாக்டர் க.மணிவாசன் இ.ஆ.ப., தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் திரு என்.சுப்பையன் இ.ஆ.ப., ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குநர் திரு.சு.சிவசண்முகராஜா இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.**

**நாள் : 11.11.2017**